**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

------------

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT No.I, PERAMBALUR**

| | | |
|---|---|---|
| Case Number | : | C.C.No. 570/2025 |
| Prosecution Witness | : | **அ.சா.**1 |
| Name | : | ரமேஷ் (**தலைமை காவலர்** ) |
| Father's / Husband Name | : | **சிதம்பரம்** |
| Address | : | **குன்னம் காவல் நிலையம்** |
| Age | : | 43/2025 |

**தேதி : 12/11/2025**

சாட்சிக்கு நீதிமன்ற உதவியாளர் திரு.G. லோகநாதன் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, விசாரணைக்கு அனுமதிக்கப்பட்டது. எதிரி ஆஜர்

**முதல் விசாரணை**

நான் குன்னம் காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணியாற்றி வருகிறேன். நான் இதற்கு முன்பு பெரம்பலூர் மதுவிலக்கு அமலாக்க பிரிவில் தலைமை காவலராக பணிபுரிந்தபோது 29.06.2025ம் தேதி அன்று மதுவிலக்கு அமலாக்க பிரிவு உதவி ஆய்வாளர் மணிகண்டன் அவர்களுடன் நானும், தலைமை காவலர் கிஷஷ்ணகுமார் ஆகியோர்களுடன் மதுரோந்து சம்மந்தமாக இந்திரா நகர் கிராம பகுதியில் ரெய்டு சென்றுக்கொண்டிருந்போது உதவி ஆய்வாளருக்கு கிடைத்த ரகசிய தகவலின்படி வாலிகண்டபுரம் திடீர் குப்பம் எதிரி வீட்டின் பின்புறம் மாலை சுமார் 12.00 மணிக்கு சோதனை செய்தபோது ஒரு நபர் எங்களை கண்டதும் தப்பிக்க முயற்சிசெய்தார். அவரை பிடித்து விசாரித்தபோது முன்னுக்கு பின் முரணாக கூறி அவருடைய பெயர் பாலமுருகன் த/பெ. வெள்ளைசாமி என்று கூறினார். அவர் ஆஜர் எதிரிதான். அவர் கையில் வைத்திருந்த பையை வாங்கி உதவி ஆய்வாளர் சோதனை

செய்தபோது அந்த பையில் 180 m.l. அளவுள்ள Mclene பிராந்தி பாட்டில்கள் 29 இருந்தது.

அரசு மதுபான கடை மூடிய பிறகு அதிக விலைக்கு விற்பதற்காக வாங்கி வைத்திருந்ததாக சொன்னார். பின்பு 12.00 மணிக்கு எதிரியை கைது செய்து 12.10 மணிக்கு எதிரியின் உறவினருக்கு கைது குறித்து தகவல் தெரிவிக்கப்பட்டது. 12.30 மணி முதல் 1.30 மணி வரை எதிரியிடமிருந்து மது பாட்டில்களை கைப்பற்றி கைப்பற்றுதல் மகசரை உதவி ஆய்வாளர் தயார் செய்தார். அதன்பிறகு 14.00 மணிக்கு மதுபாட்டில்களை திறந்து மதுவை கீழே கொட்டி அழித்து எங்கள் முன்னிலையில் அழித்தல் மகசரை உதவி ஆய்வாளர் தயார் செய்தார். கைப்பற்றுதல் மகசரில் காலி மதுபாட்டில்கள் 29 மற்றும் ஒரு சாக்குபையை மகசரில் உதவி ஆய்வாளர் கைப்பற்றினார். அந்த மகசரில் நானும், தலைமை காவலர் கிஷஷ்ணகுமார் என்பவரும் சாட்சி கையொப்பம் செய்தோம். என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகசரில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். **கைப்பற்றுதல் மகசருடன் கூடிய அழித்தல் மகசர் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யபப்படுகிறது.** பின்பு எதிரியிடம் 12.30 மணி அளவில் சாட்சிகளான எங்கள் முன்பு உதவி ஆய்வாளர் எதிரி தானாக முன்வந்து எந்த வித அச்சுறுத்துலும் இன்றி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்தார். எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமுலத்தில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். **அந்த கையொப்பம் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்பு எதிரியை 15.30 மணிக்கு காவல் நிலையம் அழைத்துவந்து காவல் நிலைய குற்ற எண். 101/2025 சட்டப்பிரிவு 4(1)(C) TNP Amendment Act 2024ன்படி முதல் தகவல்அறிக்கையை உதவி ஆய்வாளர் பதிவு செய்தார். இது சம்மந்தமாக உதவி ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>குறுக்கு விசாரணை</u>

எத்தனை மணிக்கு மது வேட்டைக்கு சென்றோம் என விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான். இந்திரா நகரில் எத்தனை மணிக்கு மது

வேட்டை செய்துகொண்டிருந்தோம் என்று விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான். 12.00 மணிக்கு அரசு மதுபான கடை திறந்திருக்கும் என்றாலை சரிதான். எதிரி யாரிடம் மதுவிற்பனை செய்தார் என்று என்னுடைய வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான். எதிரி எந்த மதுபான கடையில் கைப்பற்றப்பட்ட மதுபாட்டில்களை வாங்கினார் என்று நான் சொல்லவில்லை என்றால் சரிதான். சம்பவ பகுதி மக்கள் வசிக்கும் பகுதி என்றால் சரிதான்.

பொதுமக்களின் பெயரை குறிப்பிட்டு சாட்சியாக இருக்க கேட்டோம், அவர்கள் மறுத்தார்கள் என சொல்லப்படவில்லை என்று சொல்லவில்லை என்றால் சரிதான். ஒப்புதல் வாக்குமூலத்தில் எந்த மதுபான கடையில் மதுபானங்கள் வாங்கினேன் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். எதிரியின் உறவினரின் பெயரை எனது வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான். புள்ளி விவர கணக்கிற்காக எதிரியின் மீது எங்கள் காவல் நிலையத்தில்வைத்து தயார் செய்துகொண்ட ஒப்புதல் வாக்குமூலம், கைப்பற்றுதல், அழித்தல் மகசர்களில் என்னுடயை ஆய்வாளர் கேட்டுக்கொண்டதற்கிணங்க கையொப்பம் செய்தேன் என்றால் சரியல்ல. என்னுடைய ஆய்வாளர் கேட்டுக்கொண்டதற்கிணங்க நடக்காத சம்பவத்திற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. என்முன்னாடி எந்த தடயமும் கைப்பற்றப்படவில்லை என்றால் சரியல்ல. என் முன்னாடி மாதிரி வரைபடம், மகசர் தயார் செய்யவில்லை என்றால் சரிதான்.

Taken down by / before me in open court
read over / interpreted to the witness
in the presence of the accused / accused/
pleader and admitted by the witness to be
correct

Sd/-.
Judicial Magistrate No.1(FAC)
Perambalur.